# கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப.,

ந.க.எண்.பஅ4/2802/2021 நாள்:22.02.2022.

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – கள்ளக்குறிச்சி மாவட்டம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் – தற்போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் மணிகண்டன்(திரு).மா என்பவருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் 29.11.2017 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

பார்வை:

1. விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.பஅ1/3062/2017, நாள்:24.11.2017.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்:26.02.2021.
3. அரசுக்கடித எண்.6895/இ3/2021–5, நாள்:14.12.2021.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18355/2021/டி2, நாள்:18.12.2021.
5. தொடர்புடைய ஆவணங்கள்

–0–0–

**உத்தரவு:**

பார்வை1–ல் காணும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டம் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து 02.09.2016 அன்று பணியிடையே காலமான திரு.கா.மாரியாப்பிள்ளை என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.மா.மணிகண்டன் என்பவருக்கு கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செயது ஆணையிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தனியர் சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 29.11.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 2–ல் காணும் அரசாணையில் பத்தி எண்.5.1–ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவையில்லாத இனங்களுக்கு நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள்(One level higher than the appointing authority) வரன்முறை செய்திட ஆணை வழங்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து, திரு.மா.மணிகண்டன், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 29.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

22/2/22

மாவட்ட ஆட்சியருக்காக,
கள்ளக்குறிச்சி.

3/6

22/2/2022

பெறுதல்:

திரு.மா.மணிகண்டன்,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,
கள்ளக்குறச்சி – உரிய வழிமுறையாக.

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கள்ளக்குறிச்சி.
நகல்: பஅ4 பிரிவு இருப்பு கோப்பிற்கு.

ந.க.எண் : அ1/134/2022 உதவி இயக்குநர் (ஊ)
கள்ளக்குறிச்சி

நாள் : 25-03-2022

சார்வு செய்யப்படுகிறது.

25/3/2022

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
கள்ளக்குறிச்சி.

25/03/2022

பெறுநர்,

திரு. மா. மணிகண்டன்,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (ஊ) அலுவலகம்,
கள்ளக்குறிச்சி.